கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 13] 1919-௵ நவம்பர் & டிஸம்பர்௴ [நெ. 11 & 12

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A., and Mr. A. Subramania Iyer, B.A.

Annual Subscription is One Rupee. Post Free.

ஆட்டுமந்தையை நன்றாய் வளர்ப்பதில் கவனிக்கவேண்டிய சாதாரண குறிப்புகள்.

(சென்ற அக்டோபர்௴ 45-வது பக்கதொடர்ச்சி.)

100 அடைப்பதற்கு 40 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ள சாலை வேண்டும். சிறு மந்தைக்கு மேற்கண்ட படத்தில் காட்டியிருக்கிறபடி A லக்கமிட்ட பாகத்தில் மட்டும் சாலை அமைத்தால் போதும். சுமார் 200, 300 ஆடுகள் உள்ள மந்தைக்கு இத்துடன் B லக்கமிட்ட சாலையும் சேர்த்துப் போடவேண்டும்.

300 க்கு மேற்பட்ட பெரிய மந்தைகளுக்கு A B இவைகளுடன் C லக்கமிட்ட சாலையும் சேர்த்துப்போடுவது உசிதம். இப்படிப்பட்ட சாலை அதிகப் பணச்சிலவன்றியில் மண் சுவரினாலும் கூரையினாலும் அமைத்தால் போதும்.

இதன் கீழ், மந்தையில் உள்ள ஆடுகளைப் பொலிவுக்கு விட வேண்டிய காலத்தைப்பற்றிச் சொல்லப்படும்.

இத்தேசத்தில் வழக்கமாய் ஆடுகளையும் கிடாய்களையும் எப்பொழுதும் ஒன்றாய்த் திரியும்படி விடுவதனால் எப்ரல், நவம்பர் மாதங்களில் ஆடுகள் அநேகமாய்க் குட்டிகள் போடுகிறதோடும் மற்றக் காலங்களிலும் அப்போதைக்கப்போது குட்டிகள் பிறக்கின்றன. இது தப்பான வழக்கம். எப்ரல் மாதம் குட்டி பிறக்கிறதினால் ஆடுகளுக்கு மேய்ச்சல கம்மிப்பட்டு குட்டிகளை வளக்கிறதற்குப் போதுமான பால் அன்றியில் கஷ்டப்படுகின்றன. தவிரவும், ஜூன் மாதத்தில் வழக்கமாய்ப் பெய்கிற மழையினால் வளர்கிற புதிதான பசும் புல்லைத் தின்பதனால் ஆடுகளுக்குக் கழிச்சல் உண்டாய் மடிக்கள் அசுத்தமடைந்து கெட்ட நாற்றத்தால் குட்டிகள் பால் குடிக்கிறதில்லை. இதைக் கவனித்து மடிக்களைச் சுத்தி செய்யாததால் குட்டிகள் பால் குடிப்பதையே நிறுத்திவிட்டு இளைத்து மாறிப்போகின்றன. ஆடுகளுக்கும் பால் வற்றிப்போகிறது.

அல்லது பால் கட்டி மடி வீங்கிப்போய் ஒருக்கால் பாதிமடி அழுகியும் கீழே விழுந்துவிடுகின்றது. குட்டியும் மழைகாலம் வரும்பொழுது மிகவும் இளமையாய் இருப்பதால் குளிர் ஈரத்தால் கஷ்டப்படுகிறது. எப்ரல், அக்டோபர் மாதங்களுக்கு இடையில் மழைகாலத்திலும் குட்டிகள் பிறப்பதால் மேற்சொன்ன கெடுதிகள் அதிகரித்து ஆடுகளும் குட்டிகளும் அதிக கஷ்டப்படுகின்றன.

குட்டிகள் பிறக்கிறதற்கேற்ற சமயம் மழை காலம் முடிந்த பிறகுதான். அதாவது நவம்பர் மாதத்திற்குப் பிற்பாதிக்கப்பாலேயே. இதற்குத் தக்கபடி பொலிச்சலுக்கு விடவேண்டிய காலம் ஜூன் மாதமாகும். இந்த ஏற்பாட்டில் ஆடுகள் சினையாயிருக்கையில் ஏராளமாய்க் கிடைக்கும் மேய்ச்சலினால் செழிப்படைந்து நல்ல குட்டிகளை ஈன்று இவைகளும் செழிப்பாய் வளர்கின்றன. இப்படி நவம்பர் 15க்குப் பின்னால் பிறக்கும குட்டிகள் மழை மப்பு மந்தாரமில்லாத தெளிவான முன்பனிக்காலத்தில் பிறப்பதால் அவைகள் சௌக்கியமாய் இருக்கின்றன. இம் முன்பனியினால் உண்டாகும் குளிரினால் யாதொரு பாதகமும் இல்லை. மழை காலத்தையடுத்து வருகிற இம்முன்பனிக் காலத்தில் முதிர்ந்த புல் ஏராளமாயும் கிடைக்கும். குட்டிகளுக்கும் வேண்டியமட்டும் பால் கிடைக்கிறது. இளம் பசும் புல்லினால் உண்டாகும் கழிச்சலும் ஏற்படுகிறதில்லை. இதன் பிறகு பருத்தி, சோளத் தாளடியை மேய்த்து குட்டிகள் விருத்தியடைகின்றன.

ஆகவே, பொறுக்கியெடுத்த கிடாய்களின் மூலமாய் குட்டிகள் பிறக்கவும், நவம்பர் மாதத்திற்குப் பிறகே பிறக்கவும், வேண்டுமென்றால் ஜூன், ஜூலை மாதங்களில் சுமார் 6 வார காலத்திற்குத் தான் கிடாய்களை ஆடுகளோடு திரியவிடவேண்டும். பொலிச்சலுக்காக வைத்திருக்கும் கிடாய்களை மந்தையிலிருந்து பொலிச்சல் காலமல்லாத மற்றக் காலங்களில் விலக்கிவிட வேண்டும். வேறு எவ்விதக்கிடாயும் மந்தையுடன் திரியவிடவும் கூடாது. ஆட்டு மந்தைகளைத் தினந்தோறும் மேய்ச்சலுக்குக் கொண்டுபோகும்போது மந்தை வெளியேறும் வரை கிடாய்களை கட்டி வைத்துப் பிறகு வேறு பக்கத்திற்கு கொண்டு போய் மேய்த்துவிட்டு மந்தை சாயங்காலம திரும்பி வருவதற்கு முன்னமேயே கிடாய்களை ஓட்டிக்கொண்டு வந்து அவ்வவ்வற்றினிடங்களில் கட்டிவிட வேண்டும். இடையர்களுக்குச் சாகுபடி நிலங்கள் இருக்கும் பக்ஷத்தில், கிடாய்களைப் பொழியோரங்களில் கட்டி வைத்து மேய்ப்பது நல்லது. இப்படிச் செய்வதனால் ஆடுகளும் கிடாய்களும்தான் தோன்றியாய்ப் பொலியச் சாத்தியப்படாது.

இவ்வளவு ஏற்பாடு செய்தும் ஆடுகளும் கிடாய்களும் மேய்ச்சலினின்று திரும்பி வரும்போது, ஒரு வேளை தற்செயலாய் ஏற்படும் பொலிச்சலை நீக்கும்பொருட்டு கிடாய்களுக்கு முன் காலுக்குப் பின் பக்கமாய் மார்பின் கீழ் ஒரு தோல் உரையை கட்டித் தொங்கவிடுவது நல்லது.

இங்கே கவனிக்கவேண்டிய விஷயம் இன்னொன்று உண்டு. கிடாய்க் குட்டிகளைப் பால்குடி மாறின பிற்பாடும் மந்தையோடு விட்டு விட்டால், அவைகள் ஆடுகளை ஏறிப் பொலிய முயன்று மெலிவடையும். இப்படி இளங்கிடாய்க் குட்டிகளை, யதேச்சையாய் மந்தையுடன் திரியவிடுவது, இத்தேசத்து ஆட்டு மந்தைகள் அதிக இளப்பாய் இருக்கிறதற்கு ஒரு காரணம்.

கிடாய்க் குட்டிகளை ஐந்து மாதமானதும் மந்தையிலிருந்து பிரித்து அவைகள் விற்பனையாகும் வரையிலும் வேறாக வைத்திருக்கவேண்டும். அல்லது அவைகளை இளமையிலேயே விதை எடுத்து மந்தையுடன் திரியவிட வேண்டும். விதை எடுத்து விடுவது மிகவும் சுலபமானது.

குட்டிகள் பிறந்த 2 முதல் 6 வாரத்திற்குள் விதையெடுப்பதனால் யாதொரு நஷ்டமும் ஏற்படுகிறதில்லை.

விதையை எடுக்கச் சுலபமான வழி:—

விதையைப் பின்னே தள்ளி, விதைப்பையில் கத்தியால் ஒரு கீறல் கீறி, விதையைக் கீறல் வழியாய் வெளியே பிதுக்கி, கைவிரலால் கிள்ளியாவது பல்லினால் கடித்தாவது எடுத்துவிடலாம். இது செய்யும் பொழுது கைகளை கார்பாலிக திராவவம் கலந்த நீரில் கழுவிச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும். விதை யெடுத்த பிறகு காயத்திற்கு கார்பாலிக் எண்ணெய் போடவேண்டும் (20 பங்கு தேங்காய் எண்ணெயில் 1 பங்கு கார்பாலிக் திராவகம் போட்டு கார்பாலிக் எண்ணெய் தயார் செய்யவேண்டும்.)

மப்பு மந்தாரமில்லாத நல்ல வெயிலடிக்கிற நாளில் இந்த விதை எடுத்தலைச் செய்யவேண்டும்.

விதை யெடுத்த 2, 3 நாள் வரையிலும் காயத்தை சோதித்து ஈயாடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஈயாடுகிறதனால், காயத்தை நன்றாய்க் கழுவிப் புண்ணாறும் வரை மேற்சொன்ன எண்ணெயைப் போட்டுவரவேண்டும்.

இப்படி விதை யெடுப்பதனால் முதிராத இளங் கிடாய்க்குட்டிகள் ஆடுகளை ஏறிப் பொலிப்பதைத் தடுப்பதும் தவிர மற்றொரு குணமும் உண்டு. விதை எடுபட்ட குட்டிகள் கொஞ்ச காலத்திற்குள் விரைவாய் முன்னேறி மற்ற ஆடுகளுக்குக் கிடைக்கும் சாதாரண தீனியையே இவைகளும் தின்றாலும் அவைகளை விட ஜாஸ்தியாய்க் கொழுத்து நல்ல தோற்றத்தையடைந்து அதிக விலைக்கும் போகின்றன.

ஆட்டு மந்தையை விருத்தி செய்யவேண்டுமென்ற எண்ணமுள்ள ஒவ்வொரு ஆட்டிடையரும், முதல் முதல் மேற்சொன்ன சுலபமான அபிவிருத்தி வழிகளைக் கைக்கொள்ளவேண்டியது அவசியம்.

சுருக்கமாக இவைகளாவன:—

(1) ஒரே வர்க்கத்தை மட்டும் வைத்து வளர்ப்பது.

(2) வர்க்க விருத்தி செய்வதற்கு நன்றாய்ச் செழித்து வளர்ந்து அதிக கம்பளி ரோமத்தைக் கொடுக்கிற ஆடுகளின் கிடாய்க் குட்டிகளையே பொறுக்கி எடுக்கவேண்டும். அப்படிப் பொறுக்கி எடுத்த கிடாய்க் குட்டிகளை 18 மாதங்களுக்கு முன்னால் பொலிச்சலுக்கு விடக்கூடாது.

(3) மழை காற்றிலடிபடாதபடி ஆட்டு மந்தைகளைப் பாதுகாக்க வேண்டும்.

(4) பொலிச்சலுக்காக வேண்டும்பொழுதன்றி, மற்ற காலங்களில் கிடாய்களை மந்தையோடு திரியாமல் பிரித்து வைத்திருக்கவேண்டும். எப்பொழுதும் நவம்பர் மாதம் மத்தியில் குட்டிகள் பிறக்கும்படியான ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

(5) விருத்தி விஷயமாய் பொலிச்சலுக்கு வேண்டாத கிடாய்க் குட்டிகளுக்கு எல்லாம் விதை எடுத்துவிடவேண்டும்.

ஜி. ஆர். ஹில்சன்,
2, 3-வது சர்க்கில் விவசாய டிப்டி டைரெக்டர், பல்லாரி.

தென்னாற்காடு ஜில்லாவில் பயிர் செய்யக்கூடிய நூதன கரும்பு தினுசுகள்.

கோதாவரி ஜில்லாவில் கரும்புப்பயிர் நோய்நொடிகளால் பீடிக்கப்பட்டு கேவலஸ்திதியை அடைந்தபொழுது கவர்ன்மெண்டார் இவ்விராஜதானியில் லாபகரமாயுள்ள நூதன கரும்பு தினுசுகளைக் கொண்டு வந்து பயிரிட்டார்கள். 1902-ம் வருஷத்தில் சாமல்கோட்டா என்னும் இடத்தில் ஒரு சர்க்கார் விவசாயப்பண்ணை ஸ்தாபித்து (ஏற்படுத்தி) அதில், சென்னை ராஜதானியிலும் மற்றும் இதர ராஜதானிகளிலும் பயிர் செய்துகொண்டிருந்த நூதன கரும்பு தினுசுகளைக் கொண்டுவந்து இதற்குமுன் அந்தப் பிராந்தியத்தில் (கோதாவரி ஜில்லாவில்) பயிர் செய்துவந்த உள் நாட்டுக்கரும்புகளுடன் பயிர் செய்து பரீட்சை பார்த்தார்கள். இப்படிப் பயிர் செய்து பார்த்ததில் உள் நாட்டுக் கரும்பை விட தித்திப்பிலும் மகசூலிலும் சிறந்தவைகள் என்று சிவப்பு மோரீஸ் (Red Mauritius), மோரிஸ் நாமக் கரும்பு (Striped Mauritius), சாம்பல் மோரிஸ் கரும்பு (Ashy Mauritius), சிவப்பு ஸ்போடஸ் (Red Sports), பச்சை மோரிஸ் (Green Mauritius), என்னும் தினுசுகளைப் பொறுக்கி எடுத்து அவைகளை இவ்விராஜதானியின் நாலாபக்கங்களிலும் பரவச் செய்தார்கள். 1905-ம் வருஷத்தில் தென்னாற்காடு ஜில்லாவில் நெல்லிக்குப்பத்திற்கு அருகாமையில் பாலூரில் ஒரு ஸர்க்கார் விவசாயப் பண்ணை ஸ்தாபித்து அதிலும் இந்நூதன தினுசுக் கரும்புகளைக்கொண்டு வந்து பயிரிட்டார்கள்.

1905-ம் வருஷத்திற்குமுன் தென்னாற்காடு ஜில்லாவிலிருக்கும் கிருஷிகர் ரஸ்தாளி அல்லது உள் நாட்டு நாமதாரியென்று சொல்லும் தினுசையும், நாணல்கரும்பு என்று சொல்லப்பட்ட மற்றொரு தினுசையுமே பயிரிட்டுக் கொண்டுவந்தார்கள். நாமதாரிக் கரும்பு தின்பதற்கு கெட்டியாயில்லாமல் பல்லுக்கு மிருதுவாயுள்ள தினுசுக்கரும்பு. அதின் வளர்ச்சிக்குத் தண்ணீர் ஜாஸ்தி தேவை. ஆனால் நாணல் கரும்போ பல்லினால் லேசாய் மென்று தின்னக்கூடாத கெட்டிக்கரும்பு இனத்தைச் சேர்ந்தது. இதற்குத் தண்ணீர் ஜாஸ்தியும் தேவையில்லை. சாய்ச்சலையும் தாங்கும் குணமுடையது. நாமதாரிக்கரும்பை அனேகமாய் கூடலூர், விருத்தாசலம், திருக்கோவிலூர் தாலூகாக்களில் கால்வாய் வசதியுள்ள நஞ்சை நிலங்களிலேயே பயிர்செய்து வந்தார்கள். நாணல் கரும்பை கள்ளக்குறிச்சி தாலூகாவில் கிணற்றுதாரமுள்ள புஞ்சை நிலங்களிலும் நஞ்சை நிலங்களிலும் ஜாஸ்தியாய்ப் பயிர் செய்து வந்தார்கள். தின்பதற்குப் பல்லுக்கு மெதுவாயிருந்த நாமதாரிக் கரும்பு லேசாய் நரிக்கடியால் நஷ்டமடைந்து நோய் நொடிகளினாலும் பீடிக்கப்பட்டு நாளுக்குநாள் கேவலம் அடைந்துகொண்டே வந்தது.

பாலூர் விவசாயப் பண்ணையில் பயிரிட்டு வந்த நூதன தினுசுக் கரும்புகள் நரியின் அழிமதியில்லாமலும் நோய்நொடிகளினால் பீடிக்கப்படாமலும் இருந்தன. இத்துடன் அக்கரும்புகள் உள் நாட்டு நாமதாரிக் கரும்பைவிட பருமனாயும் நீளமாயும் வளர்ந்து ஜாஸ்தி மகசூலையும் தந்து கொண்டிருந்தது. மேற்சொன்ன நூதன தினுசுக் கரும்புகளின் சிலாக்கிய குணங்களை அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் மெச்சி அவைகளை வாங்கிப்

பயிரிட்டு வந்தார்கள். 1907-ம் வருஷ முதற்கொண்டு இந்நூதன தினுசுக் கரும்புகளின் விஸ்தீர்ணம் வருஷா வருஷம் ஜாஸ்தியாய் கொண்டேயிருந்தது. உள்நாட்டு நாமதாரிக் கரும்பைப் பயிர் செய்யும் வழக்கத்தை கைவிட்டு இந்நூதன தினுசுக் கரும்புகளைப் பயிர் செய்யும் கிருஷிகர்களுக்கு நெல்லிக்குப்பம் ஈஸ்ட் இண்டியா சர்க்கரை ஆலைகாரர் (East India Sugar Factory) போதுமான பணம் ஒத்தாசை செய்து இக்கரும்பு திணுசுகள் சீக்கிரம் நெல்லிக்குப்பத்திற்கு கருகாமையில் பரவும்படிக்கு வேண்டிய பேருதவியும் செய்து வந்தார்கள். பாலூர் விவசாயப் பண்ணையில் பயிர் செய்து வந்த அநேக புதக்கரும்பு திணுசுகளில் (Red Mauritius) சிவப்பு மோரிஸ் என்னும் திணுசு அதிசீக்கிரத்தில் நஞ்சை நிலங்களிலும் கிணற்றிறவை ஆதாரமுள்ள புஞ்சை நிலங்களிலும் சாகுபடி செய்ய லாயக்கான திணுசென்று பேர்பெற்று சீக்கிரம் நாலாபக்கங்களிலும் பரவிற்று. தற்காலத்தில் நெல்லிக்குப்பத்திலிருந்து 5-அல்லது 6-மைல் விஸ்தீர்ணத்தில், இச்சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பே பரவியிருக்கிறது. உள்நாட்டு நாமதாரிக் கரும்பு இப்பொழுது ஒன்று வேண்டுமென்றாலும்கூட கிடைப்பது அபூர்வம்.

தென்னாற்காடு ஜில்லா கிருஷிகர் (தொன்றுதொட்டு பூர்வீக முதற்கொண்டு லாபம் கொடுக்கக்கூடிய பயிர்களை சரியானபடி கஷ்டப்பட்டு பயிர்செய்வது வழக்கம். இதே பிரகாரம் இந்நூதன கரும்பு திணுசுகள் பாடுபட்டதற்குத்தக்கபடி பலன் தருமென்று தெரிந்துகொண்டவுடனே இக்கரும்பு சரியாய்ப் பயிர்செய்து எருச்செய்வதற்கு பின் வாங்கவில்லை. இப்படிக் கஷ்டப்படும் கிருஷிகர் நாளா வட்டத்தில் சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பைவிட சிலாக்கியமான கரும்பு ஏதாவது இருக்கிறதாவென்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். இம்மாதிரி இந்தஜில்லா கிருஷிகர் விசாரிப்பார்கள் என்று விவசாய டிபார்ட்மெண்டார் எற்கனவே எதிர்பார்த்து ஜாவா, பார்படாஸ், பிஜி முதலிய இடங்களிலிருந்து கொண்டுவந்து, கோதாவரி ஜில்லா சாமல்கோட்டா விவசாயப்பண்ணையில் சாகுபடிசெய்து சிறந்த கரும்பு திணுசுகளென்று பரிட்சார்த்தமாய் கண்டுபிடித்த திணுசுகளையும் நெல்லிக்குப்பத்திற்கடுத்த பாலூர் விவசாயப் பண்ணையிலும் பயிரிட்டு வந்தார்கள். இந்நூதன திணுசுகள் பாலூர் விவசாயப் பண்ணையின் மண் இயல்பு சீதோஷ்ணங்களுக்கு பழக்கமடைந்து வளர்ந்து வருங்காலையில் நெல்லிக்குப்பத்திலிருக்கும் ஆலை அதிகாரிகளும் தங்களுடைய பண்ணையிலும் இதிற் சிறந்த திணுசுகளை சாகுபடி செய்துகொண்டு வந்தார்கள்.

நெல்லிக்குப்பத்திற்கு சுற்றுப்பக்கத்தில் கரும்புப்பயிர் செய்யும் கிருஷிகர் தங்களுடைய கரும்பு மாருலை தாங்களே ஆலையாடி வெல்லம் செய்து கஷ்டப்படாமல் வெகு சுலபமாய் நெல்லிக்குப்பத்தில் ஸ்தாபித்திருக்கும் ஆலைக்குக் கொண்டுவந்து விற்கும் வழக்கமுண்டு. தென்னாற்காடு ஜில்லா கிருஷிகர் சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பு திணுசுக்கு தக்க எருச் செய்து சரியானபடி சாகுபடி செய்ய எத்தனித்தவுடன் கரும்புகள் ஓங்கி வளர்ந்தது. ஜாஸ்தி உயரம் வளர்ந்த கரும்புகள் கீழே சாய்ந்து விழுந்தால் அக்கரும்புகளிலிருந்து நஷ்டமுண்டாகும். இந்நஷ்டமுண்டாகாதபடி கரும்புத் தோட்டங்களில் அங்கங்கே கம்புகள் நட்டு அவைகள் கீழே விழாமல் கட்டவேண்டிய அவசியம் கிருஷிகருக்கு நேரிட்டது. நெல்லிக்குப்பத்திலிருக்கும் ஆலை, ஒரு

நாளைக்கு இரவும் பகலுமாய் வேலை செய்தாலுங்கூட ஒரு குறித்த விஸ்தீர்ணத்திலிருந்து வரும் கரும்பைத்தான் ஆட்டக்கூடும். நெல்லிக்குப்பத்திற்கு சுற்றுப்பக்கங்களில் கரும்புப்பயிர் செய்திருக்கும் எல்லாக் கிருஷிகரும் சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பு தினுசைத்தான் பயிர் செய்திருக்கிறார்கள். இத்தினுசு ஜாஸ்தி விஸ்தீர்ணத்தில் ஒரே காலத்தில் நட்டுப் பயிர் செய்திருக்கிறபடியாலும், ஏக காலத்தில் இப்பூரா விஸ்தீர்ணத்திலிருக்கும் கரும்பையும் வெட்டி ஆலையில் ஆட முடியாததாகையாலும், கரும்புகள் பழுத்துப் பக்குவமாகி எந்தக் காலத்தில் ஆலையாடினால் ஜாஸ்தி மாசூல் கொடுக்குமோ அதைவிட நெடுநாள் அவைகளை ஆலையாடாமல் தங்கள் நிலத்திலேயே விட்டுவைக்கவேண்டிய அவசியம் கிருஷிகருக்கு நேரிடுகிறது. இதனால் கிருஷிகருக்கு கிடைக்கும் வரும்படியில் கொஞ்சம் நஷ்டமுண்டாகிறது. ஆகையால் கிருஷிகர் தங்கள் கரும்புகளை ஆலைக்கு அனுப்பினால் மேற்சொன்ன கஷ்டம் வராதபடி சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பைவிட சீக்கிரமாய்ப் பழுத்து ஆலையாடக்கூடியதாயும் அதைவிட சற்று நாள் கழித்துப் பழுத்து ஆலையாட லாயக்குள்ளதாயிருக்கும் தினுசுகளும் பயிர் செய்தால் நெல்லிக்குப்பத்திலிருக்கும் ஆலைக்கு முன் பக்குவப்படும் கரும்பை முன்னாலும், பின்னால் பக்குவமாகும் கரும்புகளைப் பின்னாலும் அனுப்பி ஆலையை ஜாஸ்திநாள் வேலை செய்யச்செய்து கிருஷிகரும் நஷ்டமடையாமலிருக்கலாமென்று எண்ணி குறுகிய நாளில் தயாராகும் தினுசுக் கரும்புகளையும் நீடித்த நாளில் தயாராகும் தினுசுக் கரும்புகளையும் தேட அவசியம் நேரிட்டது. இந்தக் கோரிக்கை ஈடேறும் பொருட்டு பாலூர் விவசாயப் பண்ணையில் அநேக நூதன தினுசுக் கரும்புகள் சில வருஷங்களாகப் பயிர் செய்து வருகிறார்கள். இதுவரை அப்பண்ணையில் கிடைத்த அனுபோகத்திலிருந்து தென்னாற்காடு ஜில்லா கிருஷிகருக்கு இதனடியில் விவரிக்கும் கரும்பு தினுசுகளைக் குறித்த குறிப்புகள் எழுதப்பட்டிருக்கிறது:—

(1) சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பின் குணத்தை மாத்திரம் எடுத்துப்பேசினால் அது உள் நாட்டு நாமதாரிக் கரும்பைவிட மிகவும் சிறந்தது எனவே சொல்லவேண்டும். ஏனென்றால், அதிலிருந்து ஜாஸ்தி மாசூல் கிடைக்கும்.

(2) சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பையும் அதைப் போலொத்த இதர நூதன தினுசுக் கரும்புகளையும் ஒப்பிட்டால் மற்ற தினுசுகள் இதைவிட சிலாக்கியமாய்ப் பேசவேண்டும். இதர தினுசுக் கரும்புகள் ஆலையில் ஆட சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பவ்வளவு கஷ்டம் கொடுக்கிறதில்லை. ஏனென்றால், அவைகள் சிவப்பு (Red Mauritius) கரும்பைப்போல் கெட்டி தினுசுகள் அல்ல.

(3) பீஜீ பீ (Fiji B) என்னும் கரும்பும் B பார்படாஸ் 208 (Barbados 208) என்னும் தினுசுக் கருமபும் எவ்வளவு எருச்செய்து பயிர் செய்தாலும், சிவப்பு மோரிஸைப்போல (Red Mauritius) ஓங்கி வளர்ந்து கீழே சாய்ந்து நஷ்டத்தை உண்டாக்கமாட்டாது. இத்தினுசுகள் ஆலையாட சுலபமாயிருப்பதுடன் ஜாஸ்தி மாசூலையும் கொடுக்கிறது. மற்ற தினுசுக் கரும்புகள் பழுத்து முற்றினவுடன் ஆலையாடாவிட்டால் கெட்டுப்போவதைப்போல் இத்தினுசுகள் கெடுவதில்லை.

(4) பார்படாஸ் 1529 (Barbados 1529) என்னும் தினுசும், ஜாவா 247 (Java 247) என்னும் தினுசும் ஜாஸ்தி மாசூல் கொடுக்கும் தினுசுகள் என்றாலும், அவைகள் மற்ற தினுசுகளைவிட 30-முதல் 40-நாளைக்கு முன்னதாகவே முற்றி ஆலையாட லாயக்காய் விடுவதாய்த் தோற்றுகிறது.

(5) சிவப்பு மோரிஸ் (Red Mauritius) கரும்பு முற்றிப் பழுக்க எத்தனை நாள் செல்லுமோ அத்தனை நாள் பார்படாஸ் 147 (Barbados 147) என்னும் கரும்புக்கு சென்றாலும் அது சிவப்பு மோரிஸை விட (Red Mauritius) சற்று ஜாஸ்தி மாசூலைக் கொடுப்பதுடன் ஆலையாடவும் சுலபமாயிருக்கிறது.

தென்னாற்காடு ஜில்லாவில் கரும்பு சாகுபடி செய்து கரும்புகளை ஆலைக்குக் கொண்டுபோய் விற்கும் வழக்கமுள்ள ஒவ்வொரு கிருஷிகரும் மேற்சொன்ன தினுசுகள் ஒவ்வொன்றையும், தங்களுடைய நிலத்தில் கொஞ்சம் கொஞ்சம் பயிர் செய்து சாவகாசமாய் அந்தந்தக் கரும்பு தினுசுகள் முற்ற முற்ற முன்னும் பின்னுமாய் ஆலைக்குக் கொண்டுபோய் விற்றால் நஷ்டப்படமாட்டார்கள். ஆனால், எதாவது ஒரு தினுசு ½-ஏகருக்குக் குறைந்து சாகுபடி செய்தால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் ஜாஸ்தி வித்தியாசம் தெரியாது. சாதாரணமாய்க் கிருஷிகர் தாங்களே கரும்புப் பயிர் செய்து அதை ஆலையாடி வெல்லம் செய்யும் வழக்கமிருக்கும் இடங்களிலுங்கூட மேற்சொன்ன தினுசுகளைப் பயிர் செய்வது சிலாக்கியம். ஏனென்றால், எல்லாக் கரும்பும் ஏக காலத்தில் பழுத்து அதை ஏக காலத்தில் ஆலையாட முடியாத காரணத்தால் உண்டாகும் நஷ்டத்தை யடையாமல் முன்னும் பின்னுமாய் அந்தந்த தினுசுகள் முற்ற முற்ற சாவகாசமாய் ரொம்ப நாளைக்கு ஆலையடித்து லாபம் அடையலாம். மேற்சொன்ன தினுசுகள் யாருக்காவது தேவையானால் அவர்கள் நெல்லிக்குப்பத்திற்கு அடுத்த பாலூர் விவசாயப் பண்ணை மானேஜர் அவர்களுக்கு அந்தந்த வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதிக்கு முன் மனுச் செய்துகொண்டால் அவர் பண்ணையில் கிடைக்கக்கூடிய அளவுக்குத் தக்கபடி அவரால் இயன்றமட்டும் இத்தினுசுகளை விற்பார்.

ஜெ. செல்வரங்கராஜு,
விவசாய டிப்டி டைரெக்டர்,
4-வது சர்க்கில், பரங்கிமலை.

கால்நடைகளின் சாதாரணமான சில வியாதிகள்.

---

8. கால்தாங்குதல்:—யாதொரு காலிலும் வலியில்லாத ஒரு மாட்டை ஓட்டினால், அதுகால்களை நன்றாய் ஊனிவைத்து நடப்பதையும் தன்பாரத்தை எல்லா கால்களிலும் சமமாகப் போடுவதையும் பார்க்கலாம்.

ஏதாவது வலியிருந்தால், அந்தக்காலில் நிற்கும்போதாவது, நடக்கும் போதாவது, அல்லது ஓடும்போதாவது, அல்லது எப்போதுமேயாவது குறைந்த பாரத்தை போட எத்தனிக்கும். அப்போது கால் அல்லது கால்கள் நொண்டி என்று சொல்லப்படும்.

கால் தாங்கும்போது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், கால் சரியாகும் வரைக்கும் யாதொரு வேலையும் கொடுக்காமலிருக்கவேண்டும். இல்லாவிட்டால் தாங்கல் அநேகமாய் அதிகரிக்கும். ஆகையால் மாட்டை தொழிவில் கட்டிவைத்து தீனி போடவேண்டும்.

கால் தாங்குதலை கண்டுபிடித்து வைத்தியம் பண்ணுவதற்கு, மாடு சாதாரணமாய் நின்றுகொண்டிருக்கும்பொழுது கவனித்து பார்க்கவேண்டும். அப்படி நிற்கையில், ஏதாவது ஒரு காலை முன்னாடி நீட்டிக்கொண்டாவது, அல்லது அதிக வலியினால் பூமியில் படாமல் காலை தூக்கிக்கொண்டாவது இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அது மாதிரி ஒன்றுமில்லாமல் போனால், சமமான கெட்டித்தரையில் திருப்பி திருப்பி மாட்டை நடத்தியும் ஓட்டியும் பார்க்கவும். அப்போது நம்மிடமிருந்து போகும்போது பின் கால்களையும், நம்மை நோக்கிவரும்போது முன் கால்களையும் கவனித்துப் பார்க்கவும்.

அப்படி நோக்குகையில் எந்தக்காலை ஜாஸ்தி அழுத்தி ஊன்றசெய்யப்பார்க்கிறது என்று கவனிக்கவும்.

அது தெரிந்தவுடன், அழுத்தி ஊன்றுகிற கால் நொண்டியில்லையென்றும், அதற்கு அடுத்தகால் தாங்கல் என்றும் தீர்மானிக்கவும். அதாவது, உதாரணமாக, இடது பின்காலில் அதிக கனம் போட்டால் வலது பின்கால் தாங்கல் என்றும், இடது முன்காலில் ஜாஸ்தி கனம் போட்டால் வலது முன்கால் தாங்கல் என்றும் அறியவும். முன்கால்களை பரீக்ஷிக்கும்போது தலைபாரத்தை எந்தக்கால் கீழே ஊனும்போது போடுகிறதோ அந்தக் கால் வலியில்லையென்றும், எந்தக்கால் கீழே வைக்கும்போது தலையை உயரத் தூக்குகிறதோ அந்தக்கால் வலியுள்ளது என்றும் தெரியவும்.

இரண்டு முன்கால்கள் அல்லது இரண்டு பின்கால்கள் ஒரேக்காலத்தில் தாங்குமானால், அந்த இரண்டு கால்களிலும் சமமாக பாரத்தைப் போடுவதுடன், இழுத்தாப்போல் குறுகிக் குல்கி நடக்கும். தாங்குகிற காலை தெரிந்துகொண்டபிறகு, தாங்கும் காரணம் அறியும்பொருட்டு காலை மேலிருந்து கீழ்வரையில் ஒவ்வொரு பாகமாக பரிக்ஷிக்கவேண்டும்.

கால் தாங்குவதற்கு உள்ள காரணங்களில் சிலவற்றை இனிமேல் அறிவிப்போம்.

(தொடரும்.)

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B.A., for The Agricultural Association, No. 5, Cutchery Road Kumbakonam.